**த. நா.ச.பே. எண் : 028** **நாள் : 08.06.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (8.6.2018) சட்டப்பேரவையில், குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுவது குறித்து விளக்கம் அளித்தார்கள்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இங்கே எதிர்க்கட்சி தலைவர் அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற கட்சித் தலைவர் அவர்களும், மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் அவர்களும், காவேரியிலே ஜூன் 12ஆம் தேதி தண்ணீர் திறக்க இயலாது என்று முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அதைக் கண்டித்து நான் வெளிநடப்பு செய்கிறேன் என்றார்.

நான் சில விவரங்களை இங்கே அவைக்கு தெரிவிக்க விரும்புகின்றேன். ஜனாதிபதி ஆட்சி நடைபெற்று கொண்டிருந்த போது 1988–89ல், அப்போது, அவர்கள் அந்த உரிய காலத்திலே தண்ணீர் திறக்கப்படவில்லை. ஜூன் 12ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை. அதற்கு மாறாக, 7.8.1988 அன்று தான் தண்ணீர் திறக்கப்பட்டது. அதற்குப்பிறகு, 1989–90–லிலும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான். அப்பொழுதும் ஜூன் 12ஆம் தேதி குறுவை சாகுபடி செய்வதற்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை. அதற்கு மாறாக, 20.8.1989 அன்று தான் தண்ணீர் திறக்கப்பட்டது. அதேபோல, 1996–97ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போது, தண்ணீர் திறக்கப்பட்ட தேதி 26.7.1996. அப்பொழுதும் ஜூன் 12ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை. அதேபோல, 1999ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்று கொண்டிருந்த அந்த காலக்கட்டத்தில், அப்பொழுதும் ஜூன் 12ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை. 1.7.1999 அன்று தான் தண்ணீர் திறக்கப்பட்டது. அதேபோல, 2007–2008ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. அப்பொழுதும் ஜூன் 12ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை. 18.7.2007 அன்று தான் தண்ணீர் திறந்தார்கள். அதேபோல, 2009–2010ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. அப்பொழுதும் ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை. 28.7.2009 அன்று தான் தண்ணீர் திறக்கப்பட்டது. அதேபோல, 2010–2011ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. குறுவை சாகுபடிக்காக ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை. 28.7.2010 அன்று தான் தண்ணீர் திறக்கப்பட்டது.

ஆக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எல்லாம் ஜுன் 12ஆம் தேதி தண்ணீர் திறந்த வரலாறு இல்லை எனத் தெளிவாக இருக்கிறது. ஏன் என்றால், தண்ணீர் அணையிலிருந்தால் தான் திறக்க முடியும். அது காங்கிரஸ் கட்சி தலைவருக்கு தெரியும், ஏன் என்றால் அவர் ஒரு விவசாயி. ஆகவே, பருவமழை நன்றாக பெய்தால், நீர் வரத்து அதிகமாக இருக்கும், மேட்டூரில் நீர் இருப்பு அதிகமாக இருக்கும், நீர் இருப்பு இருந்தால் தண்ணீர் திறக்கப்படும். குறைந்தபட்சம் 90 அடி தண்ணீர் இருந்தால் தான், பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட முடியும். இல்லாவிட்டால், அதற்கு குறைவாக இருந்தால், அங்கே சாகுபடிக்கு தேவையான தண்ணீர் இல்லாமல் பயிர் காய்ந்துவிடும். விவசாயிகள் நஷ்டத்திற்கு உட்பட்டுவிடுவார்கள்.

ஆகவே, உரிய காலத்திலே தண்ணீர் திறக்கப்பட வேண்டும் என்பது அரசினுடைய எண்ணம் தான். ஆனால், அணையில் போதிய நீர் இல்லை. பருவமழை பொய்த்ததன் காரணமாக, அணையில் குறைவான நீர் இருக்கின்ற காரணத்தினாலே, தண்ணீர் திறக்க இயலவில்லை. இருந்தாலும், மாண்புமிகு அம்மாவுடைய அரசு, இன்றைக்கு விவசாயிகளின் நலன் காக்கின்ற அரசு அம்மாவுடைய அரசு. ஆகவேதான், ஒரு குறுவை தொகுப்பு திட்டத்தை இன்றைக்கு அம்மாவுடைய அரசு அறிவித்தது. கடந்த காலத்தில் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயிகள் பாதிக்கக்கூடாது என்பதற்காக, நீர் இல்லாமல் இருந்தால் கூட, இருக்கின்ற நீரை சிக்கனமாக பயன்படுத்தி, குறுவை சாகுபடி செய்ய வேண்டும் என்பதற்காக, பயிர் வகைகளை சாகுபடி செய்ய வேண்டும் என்பதற்காக இன்றைக்கு அம்மாவுடைய அரசு குறுவை தொகுப்பு திட்டத்தை இன்றைக்கு அறிவித்து, அதற்காக 115 கோடி ரூபாயை அறிவித்த அரசு, அம்மாவுடைய அரசு. அதையெல்லாம் பட்டியலிட்டு காட்டினேன்.

இன்றைக்கு பார்த்தீர்களானால், குறுவை சாகுபடிக்காக ஒவ்வொரு ஆண்டும் 3 லட்சத்து 15 ஆயிரம் ஏக்கர் அந்த சீசனில் பருவ காலத்திலே தண்ணீர் திறந்து விட்டு வேளாண் பெருங்குடி மக்கள் பயிர் சாகுபடி செய்வார்கள். ஆனால், மாண்புமிகு அம்மாவுடைய அரசு, இந்த குறுவை தொகுப்பு திட்டத்தின் மூலமாக, நிதி ஒதுக்கீடு செய்து விவசாயிகளுக்கு இந்த நிதி வழங்குகின்ற காரணத்தினாலே, சுமார் 3 லட்சம் ஏக்கர் அளவிற்கு அந்த பாசன பரப்பு குறையாமல் சாகுபடி செய்கின்ற சூழ்நிலையை அம்மாவுடைய அரசு உருவாக்கி தந்திருக்கிறது என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

எந்தவகையிலும், விவசாயிகள் பாதிக்கக்கூடாது என்ற அக்கறையுள்ள அரசு அம்மாவுடைய அரசு தான் என்பதை இந்த நேரத்திலே அவையின் வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர், எதிர்க்கட்சி தலைவர் அவர்கள், இன்றைக்கு தண்ணீர் உரிய காலத்திலே திறக்கவில்லை என்று இங்கே வெளிநடப்பு செய்திருக்கின்றார். நீங்களும் வெளிநடப்பு செய்திருக்கின்றீர்கள். நன்றாக சிந்திக்க வேண்டும். அதாவது, குறுவை சாகுபடி 3 லட்சத்து 15 ஆயிரம் ஏக்கர் தான் செய்கின்றோம். ஆனால், அம்மாவுடைய அரசு அங்கே இருக்கின்ற நிலத்தடி நீரை விவசாயிகள் முறையாக பயன்படுத்த வேண்டும் என்பதற்காக, இன்றைக்கு குறுவை தொகுப்பு திட்டத்தின் மூலமாக நிதியுதவி அளித்து, அதே அளவிற்கு, அந்த நெல் சாகுபடியும், பயிர் வகைகளையும் சாகுபடி செய்வதற்கு, இன்றைக்கு அம்மாவுடைய அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே, விவசாயிகளுக்கு தேவையான உதவிகளை அம்மாவுடைய அரசு செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, குறுவை சாகுபடி செய்வதற்கும், பயிர் வகைகள் சாகுபடி செய்வதற்கும், தேவையான நிதியை இந்த குறுவை தொகுப்பு திட்டத்தின் வாயிலாக, நிதியுதவி செய்து, விவசாயிகள் வாழ்வாதாரம் மேம்பாடு அடைய செய்ய வேண்டும். விவசாயிகளுடைய நிலை உயர வேண்டும் என்ற அக்கறை கொண்ட அரசு என்பதை தாங்கள் வாயிலாக காங்கிரஸ் கட்சி தலைவர் அவர்களுக்கும் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக கட்சி உறுப்பினர்களும், அவர்கள் வெளிநடப்பு செய்திருந்தாலும், அவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே, 2011ஆம் ஆண்டு தான் ஜூன் 12க்கு முன்பு, 6ந் தேதியே தண்ணீர் திறக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல, 2001–2002ல், 12.6.2001–லும், அம்மாவுடைய ஆட்சியிலே ஜூன் 12 தேதியே தண்ணீர் திறக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, தண்ணீர் இருக்கின்ற காலத்திலே எல்லாம், உரிய காலத்திலே அம்மாவுடைய அரசு தண்ணீர் திறக்கப்பட்டிருக்கிறது. தண்ணீர் அணையிலே குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே, பருவமழை சரியாக பெய்யாததன் காரணத்தினாலே, போதிய தண்ணீர் இருப்பு மேட்டூர் அணையிலே இல்லாத காரணத்தினாலே, அந்த சூழ்நிலை காரணமாகத்தான், ஜூன்

12ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது. இருந்தாலும், விவசாயிகள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, குறுவை தொகுப்பு திட்டத்தின் வாயிலாக, நிதியுதவி செய்து, எந்த அளவிற்கு, ஏற்கனவே, 3 லட்சத்து 15 ஆயிரம் ஏக்கர் குறுவை சாகுபடி செய்கின்ற பயிரிடுகின்ற அந்த விவசாயிகளுக்கு தேவையான உதவிகளை செய்து, அந்த அளவிற்கு குறையாத அளவிற்கு வேளாண் பணி செய்வதற்கு வேளாண் பெருங்குடி மக்களுக்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜூன் மாதத்திற்கு முன்பு மேட்டூர் அணை திறக்கப்பட்டது பத்து முறை. அதேபோல, ஜூன் 12ஆம் தேதிக்கு திறக்கப்பட்டது 16 முறை. ஜூன் 12ஆம் தேதிக்கு பிறகு திறந்தது 17 முறை. ஜூலை மாதத்திலே திறந்தது 25 முறை. ஆகஸ்ட் மாதம் திறந்தது 10 முறை. ஆகஸ்ட் மாதத்திற்கு பிறகு திறந்தது 5 முறை. மேட்டூர் அணை கட்டப்பட்டு 83 ஆண்டு காலம் தண்ணீர் திறப்பு பற்றிய விவரம். ஆகவே, தண்ணீர் இருப்பு இருந்தால் உரிய காலத்திலே திறக்கப்படும். நீர் இருப்பு இல்லை என்றால், உங்களுடைய ஆட்சியிலும் சரி, எங்களுடைய ஆட்சியிலும் சரி, நீர் இருப்பு இருந்தால் தான் தண்ணீர் திறக்க முடியும். நான் ஏற்கனவே, உங்களுடைய ஆட்சியிலே எந்த எந்த காலத்திலே, எப்படி தண்ணீர் திறக்கப்பட்டது என்ற விவரத்தை எல்லாம் சொன்னேன். அதுமட்டுமல்ல, மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்ற போது, மேட்டூர் அணையில் நீர் அதிகமாக இருந்த காரணத்தினாலே 6.6.2011 அன்று குறுவை சாகுபடிக்காக முன்கூட்டியே தண்ணீர் திறக்கப்பட்டு இருக்கிறது. ஜூன் 12ந் தேதிக்கு பிறகு அணையை திறப்பதற்கு பதிலாக 6ந் தேதியே முன்கூட்டியே திறந்த அரசு அம்மாவுடைய அரசு என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**